18th March 1960]

Minimum wages for the workers in the Match Industry

* 466 *Q.*—Sri T. S. RAMASWAMY (on behalf of Sri K. SATTANATHA KARAYALAR) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to enforce minimum wages for workers in the Match Industry; and

(*b*) if so, the rates and the manner in which this is to be enforced in the Match Industry?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) & (*b*) Minimum wages have not been fixed for the employment in match manufactory. With a view to fixing minimum wages for this employment, the Government have included it in the schedule to the Minimum Wages Act, 1948. The Government have also decided to constitute a Committee consisting of the representatives of employers and employees and independent persons to advice them on the minimum rate of wages to be fixed for employment in the above industry.

Coastal Highways

* **470 *Q.*—Sri M. P. SARATHI** : கனம் பொதுமராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) இந்த ராஜ்யத்தில் கடற்கரை ஓரமாக நாகப்பட்டிணம், இராமநாதபுரம், தூத்துக்குடி, கன்னியாகுமரி முதலிய இடங்களை இணைத்து ஒரு நெடுஞ்சாலை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) அதற்கான சர்வே முடிந்து விட்டதா ?

(இ) எப்போது நிறைவேற்றி வைக்கப்படும் ?

The Hon. Sri P. KAKKAN : (*a*) to (*c*) The proposal to develop the East Coast Road passing through Chingleput, South Arcot, Thanjavur, Ramanathapuram, Tirunelveli and Kanyakumari as a National Highway during the Third Five-Year Plan is at present under the consideration of the Government.

Sri M. P. SARATHI : இந்த ஆண்டு பட்ஜெட்டில்கூட இந்த இனத்தில் 300 லட்சத்துக்கு மேல் ஒதுக்கப்பட்ட நிதியில் செலவு செய்யப்படாமல் மீதமிருக்கிறது என்று கூறப்பட்டிருக்கிறது. அந்தப் பணத்தைக் கொண்டும், மத்திய சர்க்காரிடத்தில் கடன் வாங்கியும் பெரிய அளவில் அந்த ரோடைப் போட சர்க்கார் முற்படுவார்களா ?

The Hon. Sri P. KAKKAN : எற்கெனவே இருக்கும் பணத்தைக் கொண்டு போட வேண்டுமென்ற அவசியமில்லை. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்த ஈஸ்ட் கோஸ்ட் ரோட்டுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமென்று மத்திய அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல் " **Full grant** " கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தைக் கேட்பதாக இந்த அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது.

Sri A. A. RASHEED : May I know whether the Central Government have accepted our proposal?

The Hon. Sri P. KAKKAN : We will wait and see.

Sri K. B. S. MANI : இந்த கடற்கரை ஓர நெடுஞ்சாலை சென்னையில் இருந்து துவங்கி எது வரையில் முடியப் போகிறது ? எந்தெந்த ஊர்கள் வழியாக அது போகப்போகிறது என்று சொல்ல முடியுமா ?

The Hon. Sri P. KAKKAN : அங்கத்தினர் **அவர்கள்** தனியாக **கேள்வி** போட்டால் பதில் சொல்லுகிறேன்.